# WANTED
BUSINESS MANAGER & COLLECTION STAFF (MALE)

SREE KUBERA LAKSHMI CHIT FUND PVT LTD
NO. 17/3,VENGATESAN STREET, WEST TAMBARAM, CHENNAI - 600 045
84287 80699
82488 67384



# GST ROAD NEWS
## TAMBARAM
Weekly News Paper
Email:gstroadnews@gmail.com www.gstroadnews.com
Chitlapakkam, Tambaram West, Tambaram East, Sanitorium, Kadapperi, Venkatraman Nagar, Nehru Nagar, Mahalakshmi Nagar, Servamangala Nagar
Vol:13 Issue - 23 14 Sep 2025 - 20 Sep 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902



hp WORLD
We are Hiring
for Our New HP World Store at SEMBAKKAM - SELAIYUR
Job Positions
- Store Incharge
- Sales Executive
- Laptop Service Engineer

Apply Now! Experience/Fresh Graduates Invited!
Send your CV : it@soundry.in
Contact : +91 98414 22031 +91 93454 25214
www.globushpworld.com

## PLOT FOR SALE @E. TAMBARAM
BEHIND 400 MTS FROM SELAIYUR POLICE STATION
TOTAL PLOTS 10
SIZE STARTS FROM - 1251 Sqft
PRICE PER SQFT Rs.7999/-
81908 23285

LAPTOPS & COMPUTERS
SALES | SERVICES | ACCESSORIES
ஐசர்விஸ்
iService
DOOR STEP SERVICE
MONDAY to SUNDAY
10 AM TO 6 PM
No3.PADMANABHA STREET, NEHRU NAGAR, CHROMEPET
99401 60664, 94444 39494


BOOKING OPEN
www.aeonsproterty.com
+91 8939015157
HURRY!
AEONS Property Developers
3BHK WITH 2 CAR PARKING
LUXURY LIVING
INDEPENDENT DUPLEX HOUSE
East Tambaram Nr. Railway station

## பழைய பட்டுப்புடவை
வெள்ளி ஜரிகை காஞ்சிபுரம் மில் விலைக்கு வாங்கப்படும்
WE BUY OLD KANCHIPURAM SILK SAREES, OLD PATTU SAREES MYSORE SILKS,
மிக அதிகமாக பணம் தரப்படும்
SPOT CASH FREE DOORSTEP

SRI SIVA PATTU CENTRE
98406 58189 / 99401 83605 / TAMBARAM - T.NAGAR

## INDIVIDUAL VILLA FOR SALE

READY TO MOVE
@ MADAMBAKKAM SUDHARSAN NAGAR
3 BHK
STARTING BUDGET 1.20 TO 1.40 CRORE
WITH INTERIOR WORKS
TOTAL 7 UNITS
MAJESTIC FOUNDATION
98841 31132
96000 25369

## 3 BHK INDEPENDENT DUPLEX HOUSE
FOR SALE@ CHROMPET
Site Address : Hasthinapuram, Saraswathi Nagar Nr. Thirumalai Nagar, Zion School
3 BHK
As per Vasthu, CCP, Loan Arranged

MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382 / 94442 55004

## PAAVAYEE BUILDERS
Since 1988 Flat Promoters | Individual Villas | Commercial
PREMIUM FLATS FOR SALE @ HASTHINAPURAM
3 BHK
ONLY ONE UNIT AVAILABLE
✓ Lift ✓ CCP ✓ CCTV ✓ Metro Water ✓ Video Door
No Water Logging
SITE ADDRESS : MC NAGAR 1st MAIN ROAD, (OPP. TO SAI BABA TEMPLE), HASTHINAPURAM, CHITLAPAKKAM.
FLATS @ CHROMPET
JESUPATHAM ST, RADHA NAGAR
NEW PROJECT

LUXURIOUS 3 BHK
NO WATER LOGGING
✓ Lift ✓ CCP ✓ CCTV ✓ Metro Water ✓ Video Door
CUSTOMISATION AVAILABLE
Office Address : New No.27, Old No.15, Church Road, Radha Nagar, Chrompet, Chennai-44.
98410 69244 / 98408 66223

Shanthi Homes
## READY TO OCCUPY
2 BHK - 1007, 3 BHK - 1388 sqft
PREMIUM FLAT FOR SALE
@ East Tambaram ,Muthuramalingam street
★Automatic Lift ★CCTV
★As Per Vaasthu ★Car Parking

Best Price
5+ Amenities
- 3 Mins from GST Road
- 3 Mins Velachery Main Road
- 3 Mins NSN School
- 3 Mins Mepz
- 3 Mins Railway Station

FOR BOOKINGS
96001 33293

## PREMIUM FLATS FOR SALE @ CHROMPET
THIRUMALAI NAGAR, Nr. Zion School
READY TO MOVE

Natarajan Apartment
2 BHK 980 Sqft
3 BHK 1240 Sqft
Rs.72L
ALL INCLUSIVE
☑ Lift ☑ CCP ☑ CCTV
☑ As Per Vasthu
GJ CONSTRUCTION
98409 41585

## FLATS FOR SALE
@CHROMEPET-RADHANAGAR
NEMILICHERY, ZAMIN ROYAPETTAI, NR .ULAVAR SANTHAI

2 BHK- 700,850,1050 sqft
3 BHK-1060,1150,1250 sqft
LIFT/CCP/AS PER VASTHU
GR CONSTRUCTION
86107 45954 / 99414 99941

## PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET
PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
NEW Projects

24 HRS POWER BACKUP*
4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft

KRISHNA NAGAR
Nr. HASTHINAPURAM BUS STAND

24 HRS POWER BACKUP*
3 BHK - 1287 Sqft

BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
NEW Projects

24 HRS POWER BACKUP*
3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft

Specification
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Red Bricks Construction

Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD, HDFC BANK, SBI

# இரணியனை வதம் செய்ய திருக்கோஷ்டியூரில் எழுந்தருளிய விஷ்ணு

மதுரையிலிருந்து சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் செல்லும் வழியில் 65 கி.மீ. தொலைவில் உள்ளது திருக்கோஷ்டியூர். இந்த ஊரில்தான் ராமானுஜரின் குருவான திருநம்பி வசித்து வந்தார். தனது 32 வயதில் குருவை சந்தித்த ராமானுஜர் அவரிடம் மந்திர உபதேசம் பெற்றார் என்பது வரலாறு.

தொன்மையான இந்த ஊரில் சௌமிய நாராயணப் பெருமாள் கோயில் உள்ளது. கருவறையில், ஸ்ரீ தேவி, பூதேவி சமேதராக சௌமிய நாராயணன் வீற்றிருக்கிறா. இங்கு சந்தான கிருஷ்ணன், இந்திரன், கதம்ப மகரிஷி, பிரம்மா, சரஸ்வதி உள்ளிட்டோருக்கு சிலைகள் உள்ளன. சந்தான கிருஷ்ணன் 'பிரார்த்தனை கண்ணன்' என்று அழைக்கப்படுகிறார். மகாலெட்சுமி தாயாருக்கு தனி சன்னதி உள்ளது. கோயில் முகப்பில் சுயம்புலிங்கம் உள்ளது. இங்குள்ள நரசிம்மருக்கு அருகில் ராகு, கேது உள்ளனர். இங்கு மூலவர் சன்னதியின் மேல் அமைந்துள்ள அஷ்டாங்க



விமானம் மிகவும் புகழ்பெற்றது. திருமாலின் 108 திருப்பதிகளில் இது போன்ற அஷ்டாங்க விமானம் சில கோயில்களில் மட்டுமே உள்ளது. அஷ்டாங்க விமானத்தில் 'ஓம் நமோ நாராயணாய' என்ற 3 சொற்களை உணர்த்தும் விதத்தில் 3 தளங்கள் உள்ளன. கோயிலில் கொடிமரம் உள்ளது.

**தல வரலாறு** : பண்டைய காலத்தில் இப்பகுதியில் 'இரணியன்' என்ற அசுரன் வந்தான். தேவர்களை அச்சுறுத்தி வந்த இரணியனை வதம் செய்ய இந்த தலத்தில் விஷ்ணு எழுந்தருளினார். அப்பகுதியில் தவமிருந்த கதம்ப முனிவரிடம் மற்றும் தேவர்களிடம் ஆலோசனை நடத்திய பின்னர், இரணியனை விஷ்ணு வதம் செய்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

தேவர்களின் திருக்கை (துன்பம்) ஓட்டிய தலம் என்பதால் இந்த ஊர் 'திருக்கோட்டியூர்' என்று பெயர் பெற்றது. காலப்போக்கில் 'திருக்கோஷ்டியூர்' என மருவியது.பண்டைய காலத்தில் புருரூவன் என்ற சக்கரவர்த்தி மகாமக பண்டிகையின் போது, இந்தகோயிலில்திருப்பணிசெய்ய முடிவு செய்தான். பெருமாளை தரிசிக்க விரும்பி அவன் கோயிலுக்கு வந்தான். அங்கு கோயிலின் ஈசான்ய (வடகிழக்கு) மூலையில் உள்ள கிணற்றில் திடீரென நீர் பொங்கி எழுந்தது. அதன் மத்தியில் பெருமாள் எழுந்தருளினார். இதனை கண்டு மனமகிழ்ந்த புருரூவன் சுவாமியை வணங்கி வழிபட்டார். இந்த நிகழ்வுக்கு பின்னர் இந்த கிணறு "மகாமக கிணறு' என்று அழைக்கப்படுகிறது.

வருடந்தோறும் மகாமக விழாவின்போது இங்கு கருடன் மீது சௌமியநாராயண பெருமாள் எழுந்தருளி தீர்த்தவாரி செய்கிறார். இங்குள்ள திருமகள் தாயாருக்கு விளக்கேற்றி வழிபட்டால் குழந்தை பேறு ஏற்படும் என பக்தர்கள் நம்புகின்றனர். வைகுண்ட ஏகாதசி, மாசி தெப்பத் திருவிழா, நவராத்திரி உள்ளிட்டவை விசேஷ தினங்களாகும். மாசி மாத பவுர்ணமியில் மகம் நட்சத்திரத்தன்று நடைபெறும் தெப்ப உற்சவத்தில் தமிழகம் மட்டுமின்றி, கர்நாடகா, கேரளா, ஆந்திர மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். அன்றைய தினம் கோயில் குளத்தின் படிக்கட்டுகளிலும், குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான பெண்கள் தீபம் ஏற்றி வழிபடுகின்றனர்.

# சாபம் தோஷம் போக்கும் மகாளய அமாவாசை

*இறந்தவர்களின் திதி தெரியாதவர்களும், வருடத்தின் 12 அமாவாசையன்றும் தர்ப்பணம் கொடுக்க முடியாதவர்களும் புரட்டாசி மகாளய அமாவாசை அன்று திதி கொடுத்தால் ஆண்டுதோறும் திதி கொடுத்த பலனை அடையலாம். ஒவ்வொரு தமிழ் மாதமும் சூரியன் ஒரு ராசிக்குள் பிரவேசிக்கிறார். ராசி சக்கரத்தின் தென்மேற்கில் உள்ள கன்னி ராசிக்குள் சூரியனின் பிரவேசம் நிகழும் போது, புரட்டாசி மாதம் பிறக்கிறது.*

*நம்முடைய மறைந்த முன்னோர்கள், பிதுர் லோகத்தில் வசிப்பதாக ஐதீகம். இந்த மாதம், பிதுர்களுக்குரிய விடுதலை மாதமாகக் கருதப்படுகிறது. சூரியன், கன்னி ராசிக்குள் புகுந்ததும், பித்ருக்கள் விடுதலையாகி தங்கள் உறவுகளை நாடி வீடுகளுக்கு வருகின்றனர். புரட்டாசி வளர்பிறை பிரதமையில் இருந்து அமாவாசை வரையான, 15 நாட்கள் அவர்கள் பூமியில் தங்குவார்கள். இதையே, 'மகாளய பட்சம்' என்பர். 'பட்சம்' என்றால், '15 நாட்கள்' எனப் பொருள்.*

*'மகாளயம்' என்றால் 'கூட்டமாக வருதல்' என்று அர்த்தம். மறைந்த*



*முன்னோர்கள் மொத்தமாக கூடும் காலமான 15 நாட்களையே 'மகாளய பட்சம்' என்கிறோம். (சில சமயங்களில் 16 நாளாக மாறுபடும்).*

*அமாவாசை தினத்தன்று பித்ருக்களுக்கு பசியும், தாகமும் அதிகமாக இருக்கும். அவற்றை போக்க கறுப்பு எள் கலந்த தண்ணீரை தர்ப்பணம் செய்ய வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. 'தர்ப்பணம்' என்ற சொல்லுக்கு 'திருப்திப்படுத்துதல்' என்று பொருள்.*

*பித்ருக்கள் தர்ப்பணம் செய்யும் போது தர்ப்பையின் மேல் விடும் எள்ளும், அரிசியும், நீரும் பலநாட்கள் உட்கொள்ளக் கூடிய உணவாகும். அதனால் அமாவாசை நாளில் தர்ப்பணம் செய்து, அவர்களின் தாகத்தைத் தீர்க்க வேண்டும்.*

*தர்ப்பணத்தின் மூலம் பசி தாகத்தை தீர்க்காதவர்களை, முன்னோர்களின் ஆன்மா சாபம் இட்டுச் செல்லும்.*

*இது வருடக்கணக்கில், தலைமுறையாக தொடரும்போது ஜாதகத்தில் கடுமையான தோஷமாக பிரதிபலிக்கும். அது குடும்பத்தை நிச்சயம் பாதிக்கும். இதனால் குடும்பத்தில் அகால மரணங்கள், மனக்கோளாறுகள், கணவன் மனைவி பிரிவு, குழந்தை இல்லாமை, வறுமை, திருமணத் தடை ஏற்படுத்தும். கடுமையான பித்ரு தோஷத்தை தில ஹோமம், தர்ப்பணம், அன்னதானம் செய்வதால் மட்டுமே தீர்க்க முடியும். ஒவ்வொரு மாதம் அமாவாசை வழிபாடு, அன்னதானம் செய்ய முடியாதவர்கள் புரட்டாசி அமாவாசையில் செய்தால் 12 ஆண்டுகளுக்கு அன்னதானம், தர்ப்பணம் செய்யாத தோஷம் நீங்கும். இறந்தவர்களின் திதி தெரியாதவர்களும், வருடத்தின் 12 அமாவாசையன்றும் தர்ப்பணம் கொடுக்க முடியாதவர்களும் புரட்டாசி மகாளய அமாவாசை அன்று திதி கொடுத்தால் ஆண்டுதோறும் திதி கொடுத்த பலனை அடையலாம்.*

*எதுவும் செய்ய முடியாமல் இருப்பவர்கள், ஒரு பசு மாட்டிற்கு ஒன்பது வாழைப்பழங்கள் அமாவாசை அன்று கொடுக்க வேண்டும். புண்ணியத் தலங்களில் கடலில் அல்லது நதியில் நீராடி சூரிய நமஸ்காரம் செய்யலாம். அமாவாசையன்று காலை சூரிய உதயத்தின் போது கடலில் எடுக்கப்பட்ட நீரை, வீட்டுக்குக் கொண்டுவந்து தீர்த்தமாகத் தெளித்தால் வீட்டிலுள்ள தோஷங்கள் நீங்கும். ஆண் வாரிசு இன்றி பெற்றோருக்கு திதி கொடுக்க முடியாத பெண்கள், அருகில் உள்ள சிவன் கோவிலில் மோட்ச தீபம் இட்டு ஆத்ம சாந்திக்கு வழிபாடு செய்யலாம்.*

# புரட்டாசி மாத விரதங்களும் அதன் பலன்களும் !

*புரட்டாசி சனிக்கிழமையில் விரதம் இருந்தால் குலதெய்வத்தின் அருள் பரிபூரணமாக கிடைக்கும். சித்தி விநாயகருக்கு புரட்டாசி மாதம் வளர்பிறை சதுர்த்தி திதியில் விரதம் இருந்து வழிபட்டால் எதிரிகள் தொல்லைகள் இருக்காது.*

*புரட்டாசி சனிக்கிழமையில் தான் சனிபகவான் அவதரித்தார். அதன் காரணமாக, அவரால் ஏற்படும் கெடுபலன்கள் குறைய காக்கும் கடவுளான திருமாலை வழிபடுகிறோம். புரட்டாசி மாதம் சங்கடஹர சதுர்த்தியன்று விநாயகரை நினைத்து விரதம் கடைபிடித்தால் சுகபோக வாழ்வு கிடைக்கும்.*

*செல்வம், ஆயுள், ஆரோக்கியம் ஆகிய மூன்றும் குறைவின்றி கிடைக்க புரட்டாசி மாதத்தில் விரதத்தை மேற்கொள்கிறோம். புரட்டாசி பௌர்ணமி தினத்தன்று அம்பாளுக்கு 4 வண்ணங்களில் ஆடையும், ரத்தினக்கல் ஆபரணமும் அணிவித்து, நைவேத்தியமாக இளநீர் படைத்து வந்தால், குடும்பத்திற்கு தேவையான செல்வங்கள் வந்து சேரும் என்பது ஐதீகம்.*

*கடவுளுக்கு காணிக்கை மற்றும் நேர்த்திக்கடன்கள் செலுத்த புரட்டாசி மாதமே சிறந்த மாதமாக கருதப்படுகிறது. கல்வித்தடை, திருமணத்தடை, நோய்,*



*பணப்பிரச்சனை உள்ளவர்கள் புரட்டாசி திருவோணம் நட்சத்திரத்தன்று பெருமாளை வழிபடுவதால் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமை மட்டுமின்றி திங்கட்கிழமையும், புதன்கிழமையும் பெருமாள் வழிபாட்டிற்கு உகந்த நாட்களாகும். அன்றைய வழிபாடுகள் மகாலட்சுமியை மகிழ்ச்சி அடைய செய்யும்.*

*புனிதமிக்க புரட்டாசி மாதத்தில் வரும் விரதங்கள் புண்ணிய பலன்களை அதிகம் தரும் என்பது ஐதீகம். ஜேஷ்டா விரதம், மகாலட்சுமி விரதம், தசாவதார விரதம், நவராத்திரி, லலிதா விரதம் ஆகிய விரதங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.*

# புரட்டாசி முதல் சனிக்கிழமை பெருமாளுக்கு தளிகை செய்வது எப்படி?

*சனி பகவானால் ஏற்படும் சிக்கல்கள் நீங்க புரட்டாசி சனிக்கிழமைகளில் விரதம் இருந்து பெருமாளை வழிபடுவது வழக்கம். புரட்டாசி சனிக்கிழமைக்கு அப்படி என்ன சிறப்பு என நினைக்கிறீர்களா? சூரிய பகவான் கன்னி ராசியில் சஞ் சரிக்கும் காலம் இந்த புரட்டாசி மாதம். இந்த மாதத்தில் விரதம் இருந்து மகாவிஷ்ணுவை வழிபட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் கைகூடும். மகாவிஷ்ணுவின் அருளை பெறக்கூடிய நாள் என்பதால் இந்த நாளில் விரதம் இருந்தால் மகாலட்சுமியின் அருளும் நமக்குக் கிடைக்கும்.*

*புரட்டாசி சனிக்கிழமைகளில் தளிகை அல்லது படையல் இட்டு வழிபடும் முறை உண்டு.*

*வீட்டில் உள்ள பெருமாளின் உருவப்படத்தை ஒரு மனைப்பலகையில் எடுத்து வைத்து அலங்கரிக்க வேண்டும். குறிப்பாக பெருமாளுக்குப் பிடித்தமான துளசி இருப்பது அவசியம். பெருமாளின் படத்திற்கு முன் சிறிய விநாயகர் விக்ரஹம் அல்லது மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.*

*அதன் பின்பு பெருமாள் படத்திற்கு முன் மூன்று இலைகள் போட்டு ஐந்து வகை*



*சாதத்தை நைவேத்தியமாகப் படைக்க வேண்டும். சர்க்கரை பொங்கல், புளியோதரை, எலுமிச்சை சாதம், அல்லது நெல்லிக்காய் சாதம், தேங்காய் சாதம், தயிர் சாதம் வெங்காயம் சேர்க்காமல் மிளகு மட்டும் போட்டு செய்யும் உளுந்து வடை சுண்டல் பானகம் நெய்வேத்தியமாகப் படைக்க வேண்டும்.*

*மாவிளக்கு படைத்து வழிபடும் வழக்கம் இருந்தால் அதையும் சேர்த்து வழிபடலாம். இந்த சாதங்களை வரிசையாக வைத்து வழிபடலாம் அல்லது இந்த சாதங்களை கொண்டு பெருமாளின் திருமுகத்தை வரைந்தும் வழிபடலாம். தீப, தூப ஆராதனை காட்டி கோவிந்த நாமம் சொல்லி வழிபட்ட பிறகு தளிகையில் வைக்கப்பட்ட சாதத்தை நாம் சாப்பிட வேண்டும்.*

*சனிக்கிழமையில் முழுவதுமாக உபவாசம் இருந்து பகலில் தளிகை போட்டு வழிபட்ட பிறகு அந்தப் பிரசாதத்தை சாப்பிட்டு விரதத்தை நிறைவு செய்து கொள்ளலாம் அல்லது காலையில் எளிமையான உணவு எடுத்துக்கொண்டு விரதம் இருக்கலாம். தளிகை போட்ட பிறகு கோவிந்த நாமும் சொல்லி வழிபட வேண்டும். 'கோவிந்தா கோவிந்தா' என சொல்லி வழிபடும்போது கஷ்டங்கள் மீண்டும் வராது என்பது ஐதீகம்.*

*தெரிந்தவர்கள் விஷ்ணு சஹஸ்ரநாமம் சொல்லி வழிபடலாம். தெரியாதவர்கள் கோவிந்த நாமம் மட்டும் சொல்லி வழிபடலாம். வீட்டில் அஷ்ட லட்சுமியின் அருளும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.*

*20.09.2025 புரட்டாசி முதல் சனிக்கிழமையில் நாமும் திருப்பதி பெருமாளுக்கு தளிகை போட்டு விரதம் கடைபிடித்து அவரின் அருளைப் பெறுவோம்.*


# CLASSIFIEDS

## RENTAL

INDEPENDENT 1 BHK HOUSE FOR RENT
@CHROMEPET, THIRUMALAI NGR
SPACIOUS HALL, KITCHEN, BED ROOM
9840524769

INDEPENDENT HOUSE FOR RENT
@SOUTH SRIRAM NAGAR, MUDICHUR ROAD
OPP TO MAX & CROMA
Ground + Ist Flr - 1460 Sqft - 3 BHK
2 Living Rooms & 2 Bathrooms, Rent Rs. 22,000/-
SEMI FURNISHED VEG & FAMILY ONLY
80500 01119

FLATS FOR RENTAL
@ CHROMPET
AVAILABLE 3BHK
PURE VEG
8072230451

COMMERCIAL SPACE FOR RENT
@ CHROMEPET
NEHRU Ngr, RP ROAD
PRIME LOCATION
CALL FOR MORE DETAILS
82488 56149
98416 67907

## BUILDING CONTRACT

BUILDING CONSTRUCTION
» RENOVATION » INTERIOR
INCLUDING OHT & SEPTIC TANK
➡ ARCHITECTURAL DESIGN
➡ ENGINEER SUPERVISION
➡ BRANDED MATERIALS
@ 2300 Sqft
KR HOMES
CHROMPET-44
80724 99969

## INDEPENDENT HOUSE

IND HOUSE FOR SALE
@ CHROMPET
NEMILICHERY
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
80722 30451

## FLAT RESALE

FLAT RESALE
@ CHROMPET
RADHA NAGAR
NR .ST MARK'S SCHOOL
1BHK - 615 Sqft
UDS - 318 Sqft
80722 30451

FLAT FOR RESALE
@ CHROMPET
900 Sqft-UDS 440 Sqft 38 L
1100 Sqft-UDS 625 Sqft 60 L
1150 Sqft-UDS 661 Sqft 61 L
99620 03409

FLAT RESALE
@ W. TAMBARAM
Nr CTO COLONY
2 BHK - 918 Sqft UDS 530 Sqft Ist Flr
FULLY INTERIOR - CCP - 10 Yrs Old
93636 98779

FLAT FOR RESALE
@CHROMPET
@RADHA NAGAR
2BHK-742 Sqft
UDS-412 Sqft 1ST FLOOR
@KRISHNA NAGAR
1182 Sqft 484 Sqft 1ST FLOOR
80722 30451

## PLOT SALE

CHROMEPET@
PLOT 1000 SQFT 75 L
FLAT 3 BHK-55 L
98400 36137

PLOT FOR SALE
@KANNIVAKKAM
Nr. GUDUVANCHERY
1820 SQFT DTCP
APPROVED PLOT
@DHARGAS BUS STOP
80560 27726

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டுமே
044 - 2224 0607 / 89395 26999

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

GST ROAD NEWS
விளம்பர விசாரணைக்கு தொடர்பு கொள்ள:
8939 526 999
044 - 222 363 99



தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட சிட்லபாக்கம் 43வது வார்டு ஜி.டி. நாயுடு தெருவில் சீரமைக்கப்பட்ட தார் சாலை கால்வாய்க்கு அருகாமையில் தண்ணீர் ஓதம் இருந்த நிலையில் சாலையின் பக்கவாட்டில் சேதம் ஏற்பட்டிருந்தது. அதனை தார் சாலையை அமைத்த அதே ஒப்பந்ததாரரின் மூலம் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் S.R.ராஜா ஆலோசனைப்படி, மாமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் சி.ஜெகன் வலியுறுத்தலினால் பொறியாளர்களின் உதவியோடு சேதம் அடைந்த இடத்தை முற்றிலும் அகற்றி மறுபடியும் சிமெண்ட் காங்கிரட் கலவை கொண்டு சேதம் சீரமைக்க பட்டது.



சென்னை சென்ட்ரல் சிட்லபாக்கம் லயன்ஸ் சங்கத்தை சேர்ந்த லயன்எம்.மணிமாறன் தலைமையில் லைன்ஸ் மாவட்ட நிகழ்ச்சியாக ஆசிரியர் தின விழா கொண்டாட்டம் சிட்லபாக்கம் ரோஸ்லி மெட்ரிகுலேஷன் பள்ளியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு அரசு மற்றும் தனியார் பள்ளிக்கூடங்களில் இருந்து 150க்கும் மேற்பட்ட சிறந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுத்து நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டு ஜெயகோபால் கரோடியா தேசிய மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் தாமரை கண்ணன் சிறப்புரை ஆற்றி ஆசிரியர்களை மேலும் ஊக்கப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக லயன்ஸ் மாவட்ட ஆளுநர் லயன்.ஜி. சந்திரசேகர், முதல் நிலை துணையாளுநர் லயன் ஜி.துரைராஜ், இரண்டாம் நிலை துணையாளுநர் லயன்.ஆர்.ராஜன், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் லயன். ஜெ.விக்டோ பிளாக்கா, லயன்.கெ.பிரித்விகுமார், லயன்.வி.ரமேஷ்பாபு, லயன் சி.ஜெகன் MC., மற்றும் ஏராளமான லயன்ஸ் மாவட்ட நிர்வாகிகள் லயன்.என்.பாபு, லயன்.எஸ்.பாஸ்கர், லயன்.எஸ்.கணேசன், லயன் கே.ஆர் உள்ளிட்ட சென்னை சென்ட்ரல் சிட்லபாக்கம் லயன்ஸ் சங்கம் நிர்வாகிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



மத்திய அஸ்தினாபுரம் அரிமா சங்கமும் டாக்டர் மோகன் நீரிழிவு நோய் சிறப்பு மையமும் இணைந்து அஸ்தினாபுரம் விநாயகர் ஆலயத்தில் மாபெரும் நீரிழிவு நோய் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது சிறப்பு அழைப்பாளராக டாக்டர் செல்வகுமார் கலந்து கொண்டார். அரிமா சங்க நிர்வாகிகள் கே. எம். ஜே. அசோக், இ.ராஜமாணிக்கம், வட்டாரத் தலைவர் எம்.ஜெயபால்MJF, கஜேந்திரன், நாகராஜன், வெற்றிச்செல்வி,தினேஷ், சிங்கராஜ், அழகப்பன், மதுரை வீரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மைசூர் பருப்பு தால்



**தேவையானபொருட்கள்:** மைசூர் பருப்பு1 கப், மஞ்சள்தூள் சிறிதளவு, எண்ணெய் 1 டீஸ்பூன், தாளிப்பதற்கு தேங்காய் எண்ணெய் 2 டீஸ்பூன், கடுகு 1/2 டீஸ்பூன், உளுத்தம்பருப்பு1 டீஸ்பூன், சீரகம் 1 டீஸ்பூன், வெங்காயம் 1, பூண்டு 7 பல், கறிவேப்பிலை சிறிது, நெய் 4 டீஸ்பூன், உப்பு தேவையான அளவு **செய்முறை:** வெங்காயத்தை பொடியாக நறுக்கி கொள்ளவும். பூண்டை தட்டி வைக்கவும். மைசூர் பருப்பை நன்றாக கழுவி, குக்கரில் போட்டு மஞ்சள் தூள், 3 கப் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து, குக்கரை மூடி 3 விசில் விட்டு இறக்க வேண்டும். விசில் போனதும் பருப்பை கடைந்து வைக்கவும். ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் தேங்காய் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, உளுத்தம் பருப்பு, சீரகம், கறிவேப்பிலை சேர்த்து தாளித்த பின் வெங்காயம், கறிவேப்பிலை, பூண்டு சேர்த்து சிறிது நேரம் நன்கு வதக்க வேண்டும். அடுத்து மசித்த பருப்பை வாணலியில் ஊற்றி, தேவையான அளவு உப்பு சேர்த்து, 10 நிமிடம் மிதமான தீயில் கொதிக்க விட்டு இறக்கினால், சுவையான பருப்பு தால் ரெடி. இதனை சாதத்துடன் சேர்த்து, சிறிது நெய் ஊற்றி சாப்பிட்டால், அதன் சுவையே தனி தான். குழந்தைகளும் விரும்பி சாப்பிடுவார்கள். சப்பாத்திக்கு இந்த பருப்பு தால் சுவையாக இருக்கும்.

# விஜய் கட்சி மீது ஸ்டாலின் மறைமுக தாக்கு



கொள்கையில்லாக் கூட்டத்தைச் சேர்த்து, கூக்குரலிட்டு, கும்மாளம் போட்டு, பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் இயக்கமல்ல திமுக. நாம் கூடும்போது கொள்கைப் பட்டாளமாகக் கூடுவோம். கூட்டம் முடிந்து லட்சிய வீரர்களாகப் புறப்படுவோம்.” என திமுக முப்பெரும் விழாவை ஒட்டி தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறைகூவல் விடுத்துள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி, 5வது மண்டலம், 68 – 69 ஆகிய வட்டங்களில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்..ஏ உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி.க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ், 5வது மண்டல குழு தலைவர எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர் மற்றும் பலர் பங்கேற்றனர்.

# பருக்கள் மறைந்து முகம் அழகாக பளிச்சென்று பொலிவு பெற சில யோசனைகள்



அழகான முகம்... மாசில்லாத முகம் இதுதான் அனைவரின் விருப்பம். இதை எளிமையாக நம் வீட்டில் உள்ள பொருட்களை கொண்டே பொலிவு பெறலாம்.

முகப்பருதான் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான மிகப்பெரிய வேதனையாக இருக்கிறது.இதை எளிமையாக தீர்க்க ஏராளமான வழிகள் இருக்கு. மிகவும் சிம்பிளாக சீரகத்தை அரைத்து தண்ணீரில் குழைத்து பூசி வந்தால் முகப்பரு மறைந்து விடும்.


குங்குமப்பூவை பாலில் அரைத்து முகப்பரு மீது பூசி வந்தால் போது நாளடைவில் முகமும் ஜொலிக்கும். முகப்பருவும் மறைந்து விடும்.

கசகசா மசாலா பொருள் என்றுதான் நினைத்து கொள்கிறோம். ஆனால் அது மருத்துவ குணம் நிறைந்தது. கசகசாவில் எலும்மிச்சை பழச்சாறை கலந்து மைபோல் அரைத்து எடுத்துக் கொள்ளுங்கள். இந்த கலவையை தொடர்ந்து முகப்பரு மேல் தடவி வந்தால் போதும். முகப்பரு மறைவது மட்டுமின்றி முகம் "பளிச்"சென்று பொலிவு பெறும்.

சிறிது சந்தனம், மிளகு, சாதிக்காய் எடுத்துக் கொள்ளுங்க... இதை அரைத்து ஒருவாரம் முகத்தில் பற்று போட்டால் முகப்பரு நீங்கும். இதேபோல் ஜாதிக்காயை அரைத்து தினமும் பூசிவந்தால் சில நாட்களிலேயே முகப்பருவால் ஏற்பட்ட கரும்புள்ளிகள் மறைந்து முகம் நன்றாக ஜொலிக்கும்.

களிமண்ணை சிறிதளவு தண்ணீர்விட்டுபற்பசைபோல் குழைத்து கொள்ளுங்கள். இந்த கலவையை உங்கள் பாதங்களிலும், உள்ளங்கால்களிலும் நன்றாக பூசிக் கொள்ளுங்கள். 10 நிமிடத்திற்கு பிறகு வெதுவெதுப்பான தண்ணீரால் நன்கு கழுவினால் போது மிருதுவான பாதமாக மாறிவிடும். இதை மாதம் ஒருமுறை செய்தால் காலில் ஆணி இருந்தாலும் நாளடைவில் மறைந்து பாதம் அழகு பெறும்.

# பெண்கள் அவசியம் செய்ய வேண்டிய 9 மருத்துவப் பரிசோதனைகள்!



இன்றைய வாழ்க்கை முறையில், பெண்கள் வேலை மற்றும் குடும்பத்தை சமநிலைப்படுத்தி வாழ்கிறார்கள். ஆனால் வயது வளர்ந்ததும், தங்கள் உடல் நலனில் கவனம் செலுத்த மறந்து விடுகிறார்கள். இதனால் நீரிழிவு, இரத்த அழுத்தம், தைராய்டு, கால்சியம் குறைபாடு போன்ற பிரச்சனைகள் வர அதிக வாய்ப்பு உள்ளது. இதை தவிர்க்க, சில முக்கிய பரிசோதனைகளை நிதானமாக செய்துகொள்ள வேண்டும். முதலில், உடல் எடை மற்றும் உயரத்தை அடிப்படையாகக் கொண்டு பிஎம்ஐ மதிப்பை தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவது, ரத்த சோகையை பரிசோதனை செய்து, தேவையான ஹீமோகுளோபின் அளவை உறுதி செய்ய வேண்டும். மூன்றாவது, வைட்டமின் டி மற்றும் பி12 அளவுகளை சரிபார்க்க வேண்டும், இது எலும்புகள் மற்றும் உடல் சக்திக்கு முக்கியமானது. நான்காவது இரத்த அழுத்தம் பரிசோதனை அவசியம், குறிப்பாக 18 வயதிற்குப் பிறகு. ஐந்தாவது 45 வயதைக் கடந்தவர்கள் குளுக்கோஸ் அளவையும் பரிசோதிக்க வேண்டும். ஆறாவது இதயநோய் தடுப்பதற்காக, உடல் கொழுப்பு அளவையும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பார்க்க வேண்டும் ஏழாவது மார்பக புற்றுநோய் மற்றும் கருப்பை புற்றுநோய் பரிசோதனைகள் 30 வயதிற்குப் பிறகு தவறாமல் செய்ய வேண்டும். எட்டாவது எலும்பின் வலிமையை பரிசோதித்து ஆஸ்டியோபோரோசிஸ் நோயை தடுப்பது முக்கியம். ஒன்பதாவது பெருங்குடல் மற்றும் தோல் புற்றுநோய்களுக்கான பரிசோதனைகளும் சரியான நேரத்தில் செய்ய வேண்டும். ஆரோக்கியம் சிறந்த வாழ்விற்கு அடிப்படை என்பதால், பெண்கள் இதை கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

VISHNUSRI HOMES
Ind. House Plan
Flat Renovation
Expansion
Modular KItchen
Sump & Compound Wall
73972 32365
94456 80095


RAAJ INSTITUTE
B.E., B.Com., M.B.A., Diploma
School Tuition for 6th to 12th
8th Pass Directly Join 10th
10th Pass Directly Join +2
STATE / NIOS / CBSE
Spoken English & Hindi
Tally,MS Office,C,C++
No.75, Station Road, Radha Nagar, Chrompet
90032 67050

NETLON
SAI SRI DHARSHINI ENTERPRISES
Plot No:10, Door.13, Mageshwari Nagar, 3rd Street, Hasthinapuram, Chennai - 600 064.
SAINT-GOBAIN MOSQUITO NET
PROPRIETOR M.VENKATESH, B.COM.,
97103 55252 / 86109 10731

BUYING / SELLING
BUYING / SPOT CASH
WORKING AND NOT WORKING
A/C, BRASS,STAINLESS STELL, FRIDGE, OLD COMPUTER, LAPTOP, UPS, BATTERIES, MUSIC SYSTEM, WATER HEATER, GYM ITEMS, WOODEN FURNITURE, SOFA SET, COT, BEURO, DINING SET, DRESSING & OFFICE TABLE, OLD ALUMINIUM
ALL A TO Z SCRAPS
SRIRAM TRADERS
94441 33979



தாம்பரம் மாநகராட்சி 37 வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் திட்டமுகாம் சிறப்பாக நடைபெற்றது, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், மாமன்ற உறுப்பினர் மகாலஷ்மி கருணாகரன் உள்ளிட்டோர் முகாமை குத்துவிளக்கேற்றி துவக்கிவைத்தனர். இந்த நிகழ்வில் திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.கே கருணாகரன், 38வது வார்டு மாமன்ற உறுப்பினர் சரண்யாமதுரைவீரன், வார்டு செயலாளர் ராதாகிருஷ்ணன், மன்னா, பாஸ்கரன் உள்ளிட்ட நிர்வாகிகளும் மக்களுக்கு உதவும் வகையில் செயல்பட்டனர், மகளிர் உரிமைத்தொகை, முதியோர் உதவித் தொகை, சொத்துவரி பெயர் மாற்றம், மின் இணைப்பு பெயர் மாற்றம், வருவாய் துறை சார்பான 1,197 மனுகள் பெறப்பட்டது, மேடையிலேயே மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டசத்து பெட்டகம், முதியோர்களுக்கு மக்களை தேடி மருத்துவ திட்டத்தில் மருத்துவ பெட்டகம் வழங்கப்பட்டது, மேலும் பொதுமக்கள் தேவைக்காக நகல் எடுக்க மகாலட்சுமி கருணாகரன் தனது சொந்த செலவில் ஜெராக்ஸ் இயந்திரம் வரவழைக்கப்பட்டு நகல் எடுத்துத்தரப்பட்டது.



மெட்ராஸ் ஹஸ்தினாபுரம் அரிமா சங்கம் சார்பாக ஆசிரியர் தின விழா குரோம்பேட்டை அஸ்தினாபுரத்தில் உள்ள ஸ்ரீ சாஸ்தா மஹாலில் நடைபெற்றது தலைமை விருந்தினராக மாவட்ட ஆளுநர் பி. மணிசேகர் கலந்து கொண்டார் மற்றும் அரிமா சங்க நிர்வாகிகள் ஜெயக்கொடி, சிவக்குமார். கல்யாணசுந்தரம், பார்வதி மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர்.முத்துக்குமார், ராஜமாணிக்கம் உள்பட பலர் பங்கேற்றனர். விழாவில் செல்வகுமார், ரவி, நேரு ஆகியோருக்கு இந்த விழாவில் விருதுகள் வழங்கப்பட்டது நித்யா சங்கரநாராயணன் பரிசுகளை வழங்கினார். விழா ஏற்பாடுகளை அரிமா சங்க தலைவர் பிரம்ம நாயகம், செயலாளர் சங்கர் கன்ஸ்ட்ரக்ஷன் உரிமையாளர் லயன் கே.எச். சங்கரநாராயணன், பொருளாளர் ஜெயக்குமார் பிரம்மாண்டமாக செய்திருந்தனர்

## காலிமனை உரிமையாளர்களுக்கு தாம்பரம் மாநகராட்சி எச்சரிக்கை

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள காலிமனை உரிமையாளர்களுக்கு மாநகராட்சி கமிஷனர் பாலச்சந்தர் சில கட்டுப்பாடுகளை விதித்து உள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

பருவ மழைக்காலம் தொடங்க உள்ளதால், காலிமனைகளில் உள்ள முட்புதர்கள், குப்பைக் கழிவுகள் மற்றும் கழிவு நீரினால் அருகில் வசிக்கும் பொதுமக்களுக்கு மழைக் கால தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் விதமாக அனைத்து காலி மனைகளுக்கு சொந்தமான உரிமையாளர்கள் தங்களது காலிமனைகளை சுத்தம் செய்து,நீர் தேங்காமல், மண் உயர்த்தி, வேலி அமைத்து பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும், காலி மனைகளை உரிமையாளர்கள் சுத்தம் செய்ய தவறும் பட்சத்தில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட விதிக ளின்படியும், தமிழ்நாடு பொது சுகாதாரச்சட்ட விதிகளின் படியும் காலிமனை உரிமையாளர்கள் மீது தக்க சட்ட நடவடிக்கை மேற் கொள்வதுடன் அபராதம் விதிக்கப்படும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள் ளது.

## யு.பி.ஐ மூலம் பணம் அனுப்ப உச்சவரம்பு உயர்வு

காப்பீட்டு பிரீமியம், பங்குச் சந்தை முதலீட்டுக்கான ஒரு நாள் யுபிஐ பரிவர்த்தனை உச்சவரம்பு ரூ.10 லட்சம் வரை உயர்கிறது. இது வரும் 15ம் தேதி அமலுக்கு வருகிறது. இப்போதுள்ள விதிமுறைகளின்படி, ஒருவருடைய வங்கிக் கணக்கிலிருந்து மற்றொருவர் கணக்குக்கு யுபிஐ மூலம் ஒரு நாளில் அதிக பட்சமாக ரூ.1 லட்சம் மட்டுமே பணம் அனுப்ப முடியும்.




## திருப்பு முனை தரும் திருச்சி விஜய் பேச்சு

திருச்சியில் நடிகர் விஜய் பேசியதாவது: அந்தக் காலத்தில் குல தெய்வ கோயிலில் சாமி கும்பிட்டுவிட்டுதான் போருக்கு செல்வார்கள்.

அதுபோலதான் அடுத்த வருடம் நடக்க உள்ள தேர்தலுக்கு திருச்சியில், இங்கே இப்போது பணியை தொடங்குகிறேன். எம்ஜிஆர் முதல் மாநில மாநாடு நடத்திய இடம் திருச்சி, அறிஞர் அண்ணர் அரசியலில் களமாட விரும்பிய இடம் திருச்சி, பெரியாரும், அண்ணாவும், எம்ஜிஆரும் நேசித்த இடம் திருச்சி. மதச்சார்பின்மைக்கு பெயர் பெற்றது திருச்சி மண்.திருச்சி திருப்புமுனை தரும் என்று கூறினார்.







Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725